வேறு பல இடங்கள் இருக்கின்றன. அவற்றை இந்த சுற்றுலாத் துறை கையகப்படுத்தி, தங்கும் அறைகள் ஏற்படுத்து கின்ற எண்ணம் உண்டா? ஏனென்றால், இன்றையதினம் திருக்குற்றாலம் இலட்சக்கணக்கான மக்கள் வந்து போகின்ற ஒரு முக்கியமான—நடுத்தர மக்கள் ஆதரிக்கின்ற—சுகவாசஸ்தல மாக இருக்கின்றது. தங்கும் அறைகள் அவ்வளவு வசதியாக இல்லாத காரணத்தால் வருகின்றவர்கள் எல்லாம் சுற்றுலா துறைக்கு உரிய அறைகள் அங்கே இருக்கின்றனவா என்றுதான் கேட்கிறார்கள். ஆகவே, மக்கள் ஆர்வத்தோடு எதிர்பார்க்கின்ற, சுற்றுலாத் துறைக்குச் சொந்தமாக இருக்கின்ற தங்கும் அறை களை மிக விரைவிலே ஏற்படுத்திட இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் கீழ் இயங்குகின்ற ஹோட்டல்களுக்கு இருக் கின்ற மரியாதையை, வரவேற்பை நான் இங்கே கேட்டு உள்ள படியே மகிழ்ச்சி அடைகின்றேன். போன ஆண்டு குற்றாலத் திற்கு நம்முடைய ஆளுநர் அவர்கள் சென்றபோதும் இதே கருத்தை அவர்கள் தெரிவித்தார்கள். அதைத் தொடர்ந்து மிகத் தீவிரமாக அங்கே நில ஆர்ஜிதம் செய்வதற்கு ஏற்பாடு நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 561 மற்றும் 3715 ஆகியவை சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு மின்துறை அமைச்சர் சேர்த்தே பதில் சொல்லலாம்.

கூடங்குளம் அணுமின் நிலையப் பணிகள்.

*வினா எண். 561 திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா –

கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீர் எடுக்கும் திட்டத்தைக் கைவிட்டு விவ சாயத்திற்கு மட்டுமே பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கூடங்குளத்தில் ஒரு அணு மின் நிலையம் அமைக்கும்திட்டம் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு குறைந்தபட்சம் வினாடிக்கு 10 கன அடி தண்ணீர் தேவைப்படுவதாக பம்பாய் அணுசக்தித் துறை கேட்டுள்ளது. அரசின் தீவிர பரிசீலனைக்குப் பின் கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு அமைப்பின்கீழ் உள்ள பேச்சிப்பாறை அணையிலிருந்து தொடர்ந்து வினாடிக்கு

1990 சனவரி 23]

10 கன அடி வீதம் நல்ல தண்ணீர் வழங்க பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. கோதையாறு அமைப்பின் கீழ் உள்ள மேல் கோதையார் பேச்சிப்பாறை அணை, சித்தாறு அணைகள் 1 மற்றும் 2 இவற்றிற்குத் தேசிய நீர் நிர்வாகத் திட்டத்தின் கீழ்' நவீனப்படுத்தும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதால் இவற்றிலிருந்து குறைந்த அளவு தண்ணீரை அணு மின் நிலையத் திற்குத் தருவதால் பாசன வசதிகள் எந்தவிதத்திலும் பாதிக்காது.

*வினா எண் 3715 திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூடங்குளம் அணுமின் நிலையப் பணி எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அதில் தமிழக அரசின் பங்கு என்ன ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, (அ) கூடங்குளம் அணுமின் நிலையப் பணிகளில் மண் ஆய்வுப் பணிகள் பூர்த்தி அடைந்து விட்டன. இதற்கான அறிக்கை மத்திய அரசின் அணு சக்திக் கழகத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது. மேற்கொண்டு அணு மின் நிலையம் அமைப்பதற் கான வேலைகளை அணு சக்திக் கழகமே மேற்கொண்டுள்ளது.

(ஆ) தமிழ்நாடு அரசு இந்த அணு மின் நிலையம் அமைக்க தேவையான புள்ளிவிவரங்களை சம்பந்தப்பட்ட மத்திய மாநில துறைகளிலிருந்து பெற்றுத் தருவதிலும் நிலத் தன்மை ஆய்வு போன்ற பணிகளை மேற்கொண்டும் மின் நிலையம் மற்றும் நகரியம் அமைத்திடத் தேவையான நிலத்தைக் கையகப் படுத்தும் உரிமை மாற்றும் பணியிலும், இத்திட்டத்திற்குத் தேவையான நீரை வழங்கிடவும் இயன்ற உதவிகளைப் புரிந்து வருகின்றது.

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பழையாற்றில் மழைக் காலத்தில் வரும் தண்ணீர் வீணாகக் கடலில் சென்று கலக்கிறது. எனவே, பழையாற்றில் தாமரைக்குளம் ஊர் அருகே, பிள்ளை பெற்ற அணை என்ற சிறிய அணையை மிகப் பெரிய அணையாகக் கட்டினால் கூடங்குளத்திற்குத் தண்ணீர் கொண்டு செல்வதற்கு மிக வசதியாக இருக்கும். எனவே, அதை மாற்றும் திட்டம் ஏதேனும் உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இது கூடங்குளத்திலே அமையவிருக்கின்ற அணு மின் நிலையத்திற்குத் தண்ணீர் வழங்குவது பற்றிய கேள்வி.

எனவே, அதற்கான விடையை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலே பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூடங்குளம் அணு மின் நிலையத்திற்கு நிலங்களைத் தருகின்ற விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் களுடைய பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பிலே முன்னுரிமை தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்போதுதான் ஆரம்பப் பணிகள் தொடங்கப்பட்டு இருக்கின்றன. ஏறக்குறைய 1,500 ஹெக்டேருக்கு மேல் நிலம் தேவைப்படுகிறது. அது சம்பந்தமாக மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தைக் கேட்டு இருக்கிறது. மாநில அரசாங்கம் அந்தப் பணிகளிலே ஈடுபட்டு இருக்கிறது. அப்படியே மாநில அரசாங்கம் நிலத்தை ஆர்ஜிதம் செய்து மத்திய அரசுக்கு ஒப்படைத்தாலும் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் மத்திய அரசாங்கத்தினர் தான். மாநில அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் நிலம் கொடுப்பவர்களுடைய வீட்டுப் பிள்ளைகளுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்தும்.

10–05 மணி

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அணுமின் நிலையப் பகுதியிலே கட்டுகின்ற அலுவலகங்கள், கோடவுன் போன்ற கட்டுமானப் பணிகள் அனைத்தும் தொகுதியிலுள்ள பகுதிகளிலே கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணுமின் நிலையம் அமைந்திட விஜயாபதி என்ற கிராமத்திலே 1,037 ஹெக்டேர் நிலமும், செட்டிகுளம் என்ற கிராமத்திலே 516 ஹெக்டேர் நிலமும் ஆர்ஜிதம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த அபிவிருத்தித் திட்டங்கள் தனியாக இருந் தாலும் இந்த இரண்டு கிராமத்திற்குள்ளேதான் நடைபெறும்.

திருவண்ணாமலையில் அதிக அளவு சக்தியுள்ள மின் நிலையம்.

* 1025 திரு. கே. பிச்சாண்டி :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலையில் அதிக அளவு சக்தியுள்ள மின் நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?